# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.
## C C No. 94/2018

Deposition of Witness : LW9 /PW9

| | | | |
|---|---|---|---|
| Name | கங்காதரன், சிறப்பு உதவி ஆய்வாளர் | Taluk | |
| Father's Name | கண்ணுசாமி | Caste | |
| Village | | Calling | |
| Age | | Religion | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **10.08.2023** | | | |

( Accused present)

**முதல் விசாரணை**-

1. நான் தற்போது குள்ளஞ்சவாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் காடாம்புலியூர் காவல் நிலையத்தில் 2017 ஆண்டு, நவம்பர் முதல் 2019 ஆண்டு , மார்ச் மாதம் வரையில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். அப்போது 08.02.2018 அன்று 20.00 மணிக்கு நான் தலைமை காவலர் 2173 ஆக நிலையத்தில் இருந்தபோது ஞானசேகரன் மகன் சக்திவேல் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண். 53/2018 ல் இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) உ/இ பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7/அ.சா.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நான் அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை உடனே கனம் ஜே.எம்.2 பண்ருட்டி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் ராஜசேகரன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**-

1. காடாம்புலியூர் காவல் நிலையத்தில் யார் என்னிடம் புகார் கொடுத்தார் என்றால் அருள்செல்வியின் கணவர் சக்திவேல் புகார் கொடுத்தார். அருள்செல்வியை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சக்திவேல் கொடுத்த புகாரை பெற்று யாரையும் விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். சக்திவேல் மனைவி வாகன்தில் செல்லும்போது அடிப்பட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளார் என்றும், அவரது கணவர் சக்திவேல் கொடுத்த பொய்யான புகாரை பெற்று சரவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.